# அரசாங்க சேவை ஆணைக்குழு

# இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சிரேஷ்ட மட்டத்திலான பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தர அட்டவணையிடப்பட்ட பதவிகளில் காணப்படும் 07 வெற்றிடங்கள் மற்றும் 2024 ஆம் ஆண்டு (நவம்பர்) உருவாக்கப்படும் வெற்றிடங்கள் 02 ஆகவும் 09 வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் முதலாம் தர உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. அதற்கமைய இப்பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான மாதிரி விண்ணப்பங்கள் இத்துடன் கோரப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் நிறுவனத் தலைவரின் அனுமதியுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.03.20 க்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் சிரேஷ்ட மட்டத்திலான பதவி வெற்றிடங்களை நிரப்புதல்"** எனும் சொற்றொடர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
த.பெ.இல 13, கெட்டம்பே
பேராதெனிய.

03. வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை மற்றும் அவை இருக்கும் நிறுவனங்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

- கமத்தொழில் கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு
  - * பணிப்பாளர் (கால்நடை மற்றும் திட்டமிடல்) - பதவி 01
- சுகாதார அமைச்சு
  - * பணிப்பாளர் (பொது சுகாதாரம்,கால்நடை வைத்திய சேவை - பதவி 01
- கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

*பணிப்பாளர்(கால்நடை ஆரோக்கியம், கால்நடை திட்டமிடல் மற்றும் பொருளாதாரம், கால்நடை வளர்ப்பு, மனித வளங்கள், கால்நடை கட்டளைகள் மற்றும் சட்டங்கள்) - பதவி 05

*பிரதான விலங்கு தனிமைப்படுத்தல் உத்தியோகத்தர் - பதவி 01 (தகைமை பூர்த்திசெய்த கால்நடை மருத்துவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்)

*பதிவாளர் (கால்நடை உணவு) – பதவி 01

04. **பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் I ல் மூன்று வருடம் (03) செயற்றிறன் சேவை காலம் முழுமையடைந்த உத்தியோகத்தராக இருத்தல்.

05.கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கமைய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் விண்ணப்பத்தாரிகள் மட்டும் திட்டமிடப்பட்ட நேர்முகப்பரீட்சையின் முடிவுகளுக்கமைய கூடிய புள்ளிகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய பதவிகளுக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு மூலம் நியமனம் வழங்கப்படும். உரிய உத்தியோகத்தர் அப் பதவியை ஏற்காவிடின் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளுக்கமைய அடுத்த கூடிய புள்ளிகளை பெற்ற உத்தியோகத்தர்க்கு அப் பதவிக்கான நியமனம் வழங்கப்படும்.

06. திட்டமிடப்பட்ட நேர்முகப்பரீட்சையின்; புள்ளிகள் வழங்கப்படுவது விடயதானம் மற்றும் அதிகூடிய புள்ளிகளின் அளவு

| புள்ளிகள் வழங்கப்படும் பிரிவு | வழங்கப்பட்ட புள்ளிகளின் அளவு |
|---|---|
| **1. சிரேஷ்ட நிலை** | **- அதிகபட்ச புள்ளிகள் 40**<br>இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் தரம் 1 ல் மூன்று வருடம் (03) செயற்றிறன் சேவை காலம் பூர்த்தி செய்த முழு செயற்றிறன் மற்றும் திருப்திகரமான சேவை காலத்திற்காக பின்வருமாறு புள்ளிகள் வழங்கப்படும்.<br>(மேலதிக பணி அனுபவத்திற்கு அதிகபட்ச புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளது / அந்த தரத்தில் அதிக கூடுதல் செயலில் மற்றும் திருப்திகரமான சேவையைக் கொண்ட அதிகாரியின் சேவையின் நீளம்) X சம்பந்தப்பட்ட அதிகாரியின்மேலதிக சுறுசுறுப்பான மற்றும் திருப்திகரமான சேவை (ஆண்டுகள் x 12 + மாதங்கள்) |

| | |
|---|---|
| **2.** தகுதி | அதிகபட்ச புள்ளி 60<br><br>**I.** செயற்றிறன் மதிப்பீடு (முழுமையான 05 வருடங்களுக்காக) - புள்ளி 15<br>- விசேட - புள்ளி 03<br>- சாதாரண அளவை விட கூடுதலான - புள்ளி 02<br>-திருப்திகரமான - புள்ளி 01<br><br>**II.** <u>பிரிவின் மேம்பாட்டுக்குரியவையை முன்வைத்தல் - புள்ளி 10</u><br>- முன்வைக்கப்பட்ட விடயங்கள் - புள்ளி 04<br>- தயாரிப்பு, உருவாக்கம், முன்வகிக்கும் நிலை மற்றும் கால முகாமைத்துவம் - புள்ளி 03<br>- பரீட்சிப்பு குழுவால் அனுப்பும் பிரச்சினைக்கான பின்னூட்டல் - புள்ளி 03<br><br>**III.** <u>**பதவிக்கான கால்நடை பிரிவின் மேம்பாட்டுக்கு பங்களிப்பு மற்றும் அனுபவம் - புள்ளி 10**</u><br>கால்நடை பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு - புள்ளி 05<br>(ஒரு செயல்பாட்டுக்கான புள்ளி 01 ஆகும். நிறுவனத் தலைவரினால் எழுத்துமூலம் உறுதிபடுத்தல் வேண்டும்)<br>-உரிய பிரிவில் அனுபவம் - புள்ளி 05<br>(வருடத்திற்கு 01 புள்ளி வீதம்)<br><br>(நேர்முகப் பரீட்சை சபையால் குறிப்பிடப்பட்ட கேள்விகளுக்கான பதில்களில் திருப்தி அடைந்த பிறகு, மேற்கூறிய இரண்டு துணை கூறுகளுக்கு மேற்கூறிய சபை அதிகாரிக்கு புள்ளிகளை வழங்கும்.)<br><br>**IV.** <u>**பதவிக்குரிய பிரிவின் கல்வித் தகைமை – புள்ளி 05**</u><br>- முதுமாணி பட்டதாரி, சாதாரணம் அல்லது உயர்தர தகைமை - புள்ளி 05<br>- முதுமாணி பட்டதாரி டிப்ளோமா - புள்ளி 02<br><br>**V.** <u>**ஏனைய தகைமைகள் - புள்ளி 15**</u><br><br>-மாகாண, தேசிய மற்றும் சர்வதேச விடயதானங்களில் பெற்றுக்கொண்ட சிறந்த பெறுபேறுகள்<br>-பாராட்டு கடிதங்கள் (பொது 230 பி படிவம்) அல்லது<br>-சர்வதேச அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கூற்று அல்லது<br>-சர்வதேச அல்லது தேசிய அறிவியல் இதழ்களில் வெளியிடப்பட்ட ஆவணங்கள்<br>• Full paper in peer reviewed journals, Book Chapters -3<br>• Extended abstract -2<br>• Abstracts - 1.5<br>• Newsletters /Leaflets etc. - 1 |

| | |
|---|---|
| | (மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஒன்றுக்கு – 3 புள்ளி வீதம் அதிகூடிய 05 சந்தர்ப்பத்திற்கான ஆவணங்கள் முன்வைப்பதுடன், நிறுவனத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)<br><br>VI. <u>நேர்முக பரீட்சையில் வெளிப்படுத்திய திறமை - புள்ளி 05</u><br>தலைமைத்துவம் - புள்ளி 02<br>தொடர்பாடல் திறன் - புள்ளி 02<br>ஆளுமை - புள்ளி 01 |

கருத்திற்கொள்ள வேண்டிய விடயம்:

i. ஆட்சேர்ப்பின் போது அல்லது தரம் உயர்த்தலின் போது அடிப்படை தகைமையாக மற்றும் வினைத்திறன் தடைத்தாண்டல்களுக்கான கருத்திற் கொள்ளாத தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.

ii. உயர்கல்வித் தகைமைக்கு புள்ளி வழங்குவதில் அதிகபட்ச ஒரு தகைமைக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்.

07. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவம் மற்றும் வேறு ஆவணங்களில் முறையாக உறுதிபடுத்தப்பட்ட பிரதிகள் அடங்கிய கோவையுடன் அனுப்பப்படல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிகளுக்கமைய,

டீ.பீ. விக்ரமசிங்ஹ
செயலாளர்
கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

திகதி - 2025/12/20